[22nd November 1963

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த சம்பவத்தில் ஆண் மாணவர்கள் பெண் மாணவிகள் பேரில் ராகிங் நடத்தியதாகவும், அது பத்திரிகையில் போட்ட பின்னர் மாணவிகளின் தாய் தந்தையர் தங்களுடைய பெண்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அந்த பிரின்ஸிபால் அதை மூடி மறைப்பதற்காக அத்தகைய ஸ்டேட்மெண்டை வாங்கினரா என்று அமைச்சர் விளக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாணவிகளை மூடி மறைப்பதற்காக அம்மாதிரி ஸ்டேட்மெண்ட் வாங்கவில்லை. என்க்வயரிக்குப் பிறகு மாணவியோ, அவர்களுடைய தாய் தந்தையரோ கூறியதன் பேரில் அவர்களாக வந்து பத்திரிகையில் வெளிவந்த அளவு 'ராகிங்' நடக்கவில்லை என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்கள்.

Mr. SPEAKER : Probably she was not prepared for an enquiry.

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு.

* 421 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி, எஞ்சினீரிங் கல்லூரி ஆகியவற்றில் சேருவதற்காக **Nativity Certificate** அந்தந்த மாவட்டத்தில் குடி இல்லாதவர் சிலர் வாங்கியதாக அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இந்த இரண்டு கல்லூரிப் படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பிரசுரம் செய்வதற்கு முன்பாக போலீஸ்**C.I.D.** மூலமாக அவ்வித **Nativity Certificate** பரிசீலிக்கப்படும் உத்தேசமுண்டா ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) An anonymous petition and a telegram alleging production of false nativity certificates were received by the Selection Committee in respect of admissions to Medical Colleges.

(*b*) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், இந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கவேண்டுமென்ற காரணத்தினல் பிற மாநிலங்களிலிருந்து மாணவர்கள் நம் மாநில நேடிவிடி ஸர்டிபிகேட் வாங்கும் முயற்சியில் ஈடுபடுகிருர்கள். இம்மாதிரி தவறுகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட தொகுதியிலிருக்கும் சட்டமன்ற உறுப்பினரிடமும் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்று விதி போட முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியாக அரசாங்கத்திடம் திட்டமில்லை.

* 422 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware that in 1963–64 the students applying